# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**FAST TRACK COURT AT MAGISTERIAL LEVEL, PATTUKKOTTAI**

| | |
|---|---|
| **STC. No.** | **80/2024** |
| **பெயர்:** | **பிரகாஷ் -DW1 Chief** |
| **தந்தை பெயர் :** | **ஜெயசந்திரன்** |
| **வயது:** | **36/2026** |
| **ஊர்:** | **பன்னவயல்** |
| **தாலுக்கா** | **பட்டுக்கோட்டை** |
| **வேலை** | **விவசாயம்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of **14th day of August 2026**

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் 04.12 PM**

**எதிரி தரப்பு முதல் விசாரணை**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான திருமதி. Usha (Assistant) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

1. இவ்வழக்கின் புகார்தாரரான பாலாஜி என்பவரை எனக்கு நேரடியாக தெரியாது. என் நண்பர் பேராவூரணியை சேர்ந்த முத்து என்பவர் ஆவார். நானும் முத்துவும் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களை வாங்கி, அதை விற்போம். எனக்கு புகார்தாரரை முத்து என்பவர் மூலம்தான் பழக்கம். முத்து என்பவர் என்னுடைய ஒரு காசோலையை செக்யூரிட்டியாக பெற்றுக்கொண்டார். அதன்பிறகு எனக்கு புகார்தாரர் மூலம் வழக்கறிஞர் அறிவிப்பு வந்தது.

2. நான் வழக்கு காசோலையில் கையொப்பம் எதுவும் போடவில்லை. நான் வெற்று காசோலையை முத்து என்பவரிடம்தான் கொடுத்தேன். வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என்பதற்கிணங்க சமூகநீதிமன்றத்தில் என்னால் தொடுக்கப்பட்ட STC 19/2022 வழக்கு லோக் அதாலத் மூலம் Award ஆனது, அந்த Award-ல் புகார்தாரர் என்ற இடத்தில் என்னுடைய கையொப்பம் உள்ளது. அந்த கையொப்பம் **EX-D1** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. நான் காசோலையில் உள்ள தொகையை கொடுக்க கடமைபட்டவர் இல்லை. நான்

காசோலையில் உள்ள கையொப்பத்தை ஒப்பிட்டு பார்ப்பதற்கு Forensic Expert-க்கு அனுப்ப தயாராக உள்ளேன்.

**முடிக்கப்பட்ட நேரம் 04.23 PM**

**எதிரி தரப்பு முதல் விசாரணை முடிக்கப்பட்டது**

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.